**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 510 /2015

PW-3 29-08-2024

| | |
|---|---|
| Name | தினகரன் |
| Father's/Husband's Name | வேல்முருகன் |
| Village | கோவில்பட்டி |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | – |
| Calling | சேல்ஸ் மேனேஜர் |
| Religion | – |
| Age | 30 |

(A1 to A3 absent.Petition filed and allowed)

<u>முதல்விசாரணை</u>

1) நான் கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் சேல்ஸ் மேனேஜராக வேலை செய்கிறேன். அசா 1 ஐ தெரியும். எனது மேனேஜர் ஆவார். வழக்கமாக எங்கள் அலுவலகத்தை காலை 9–9.30 மணியளவில் திறந்து இரவு 8 ம ணிக்கு மேல் பூட்டிவிட்டு செல்வது வழக்கம்.

2) 11.10.2015 தேதி இரவு 8.30 மணியளவில் அலுவலகத்தை பூட்டிவிட்டு மறுநாள் காலை 9.30 மணியளவில் நாங்கள் அலுவலகத்தை சென்று பார்த்தபோது அலுவலகத்தின் பூட்டு உடைபட்டிருந்தது. உடனே அசா 1க்கு தகவல் கூறினேன்.

3) அவர் வந்தவுடன் உள்ளே சென்று பார்த்தோம். உள்ளே இருந்த பணப்பெட்டி காணாமல் போயிருந்தது. இது சம்மந்தமாக அசா 1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். பணப்பெட்டியை திருடி நபர் யார் என்று எனக்கு தெரியாது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. சிறிது நாட்கள் கழித்து பணப்பெட்டியை திருடிய நபர்களை கண்டுபிடித்ததாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக போலிசார்

என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எங்கள் கொரியர் அலுவலகத்தில் எவ்வளவு கொரியர் வந்துள்ளது என்றும் எவ்வளவு பணம் வந்துள்ளது என்று தினமும் கணக்கு பார்த்துவிட்டுதான் அலுவலகத்தை பூட்டி செல்வோம் என்றால் சரிதான்.

2) நான் டெலிவரி பிரிவில்தான் வேலை செய்கிறேன். தினமும் காலையில் கோவில்பட்டிக்கு வந்து என்னனென்ன டெலிவரி வந்துள்ளதோ அதை எடுத்துக்கொண்டு டெலிவரி செய்ய சென்றுவிடுவேன்.

3) எங்கள் அலுவலகத்தில் கணக்கு வழக்கு விபரங்களை மேனேஜர் பார்ப்பார். சம்பவ காலத்தில் எத்தனை கொரியர் டெலிவரிக்காக வந்தது என்பது அலுவலக ஆவணங்களை பார்வையிட்டால் தெரியவரும் என்றால் சரிதான்.

4) ஒவ்வொரு நாளும் கணக்கு வழக்கை முடித்து அன்றைய நாளில் டெலிவரி செய்யப்பட்ட பார்சல்கள் குறித்த விபரங்களை மேனேஜர் தலைமையிடத்திற்கு தெரிவிப்பார்.

5) சம்பவத்தன்று அலுவலகத்தில் எவ்வளவு கையிருப்பு இருந்தது என்று மேனேஜருக்கு தான் தெரியும்.வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

6) அலுவலகத்தை சூப்பர்வைசர் திறந்து பணம் காணாமல் போனது என்று அவர் சொல்லிதான் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். நான்சொன்னமாதிரி சொன்னநாளில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் மேனேஜர் கூறிய விபரங்களை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த

சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி